உ

ஸ்ரீ குருப்யோ நம:

'சிவாகம பாஸ்கர'

சிவஸ்ரீ G.கார்த்திகேய சிவம்

சிவாகம ஆசிரியர், ஸ்ரீ ஸ்கந்தகுரு வித்யாலயம்,

திருப்பரங்குன்றம்

ஆத்மசுத்தி விளக்கம்

(சித்தமலம் அறுவித்து சிவமாக்கும் மஹாக்ரியை)

ஶிவாகமங்கள், ஶிவபூஜையைச் செய்ய இருக்கின்ற ஸாதகன், அதற்கு முன்பாகச் ஶிவபூஜையைச் செய்வதற்கானத் தகுதி உடைவனாகத் தன்னை ஆக்கிக் கொள்வதற்காப் பல க்ரியைகளை விதித்திருக்கின்றன.

பெரும்பாலும் அந்த க்ரியைகள் அனைத்தும் தன்னை அதாவது ஸாதகனைத் தூய்மை செய்துகொள்வதற்காக விதிக்கப்பட்டனவே ஆகும். தந்த தாவநம், ஸ்நாநம், ஸந்த்யாவந்தநம் போன்றவை அவற்றுள் அடங்கும். இவைகளை எல்லாம் நிறைவேற்றாமல் ஒருவன் பூஜைசெய்ய விரும்புதல் கூடாது என்பது ஶாஸ்த்ரங்களின் முடிவு.

ஸாதாரணமாகவே நாம் இறைவழிபாடு செய்யும்போது நம்மைப் பலவகைகளிலும் தூய்மை செய்துகொண்டு தான் வழிபாட்டைச் செய்யத்துவங்குவோம். ஆனாலும் நம் கண்களுக்குக்குப் புலப்படுகின்ற அஶுத்தங்களை மட்டுமே நம்மால் ஶுத்தம் செய்யமுடியும். ஶாஸ்த்ரங்கள் ஶுத்தம் என்று குறிப்பிடுகின்ற நிலையை நாம் அடைதல் என்பது நமது ஸ்வய முயற்சிக்கு அப்பாற்பட்ட விஷயம். எனவே ஶாஸ்த்ரங்களைப் பின்பற்றியே அந்நிலையை நாம் அடைய முயலவேண்டும். எனவே ஶாஸ்த்ரங்கள் நம்மைத் தூய்மை செய்து கொள்வதற்கு எங்ஙனம் வழிகாட்டுகின்றன என்பதைப் பார்ப்போம்.

பஞ்ச ஶுத்தி=ஐவகை சுத்திகள்

தூய்மை நிமித்தமாகக் கூறப்பட்ட க்ரியைகள் பலவற்றுள் பஞ்சஶுத்தி என்ற ஐவகை ஶுத்திகளும் ஒன்றாகும். அவைகளை நிறைவேற்றிய பிறகே ஶிவபெருமானை ஆராதனை செய்வதற்கான தகுதியானது முழுமையடைகிறது என்பது ஆகமங்களின் தீர்மானம்.

எவன் பஞ்சஶுத்திகளை நன்கு அறிந்திருக்கிறானோ அவனே ஶிவபூஜையைச் செய்வதற்கான தகுதியைப் பெறுகிறான் என்கிறது ஸ்ரீமத் வாதுளாகமம்.

"யொ வேத்தி பஞ்சசுத்திந்து ஸ பூஜாம் கர்துமர்ஹதி" !

க்ரியா-க்ரம-த்யோதிகா. ப்ரபாவ்யாகயா, பக்-59

ஐவகை ஶுத்திகளாவன,

1. ஆத்ம ஶுத்தி
2. ஸ்தானஶுத்தி
3. த்ரவ்யஶுத்தி
4. மந்த்ர ஶுத்தி [1]
5. லிங்கஶுத்தி என்பன ஆகும். இதை ஆத்மஶுத்தி க்ரியாபூர்வா எனத் தொடங்கும் ஸ்ரீமத் பூர்வகாமிகாகம வாக்யம் விளக்குகிறது.

"ஆத்ம சுத்தி க்ரியா பூர்வா ஸ்தான சுத்திர்த்விதீயகா !
த்ருதீயா த்ரவ்யசுத்தி: ஸ்யாது சதுர்தம் மந்த்ரசோதநம் !!
பஞ்சமோ(மா) லிங்கசுத்திச்ச கத்யந்தே பஞ்சசுத்தய:" !

ஸ்ரீமத்காமிகாகம:, பூர்வபாக:, அர்ச்சநவிதிபடல:ஶ்லோ-37, பக்-26

ஸ்ரீமத் தாயுமான ஸ்வாமிகளும்,

பஞ்சசுத்தி செய்து நின்னை பாவித்துப் பூஜைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே. என்று பாடுகிறார்.

பாடல் எண்-154, பராபரக்கண்ணி,

மேற்கூறிய ஐவகை சுத்திகளுள் முதலாவதான '**ஆத்மஶுத்தி**' என்ற க்ரியையே இன்று நாம் சிந்திக்க இருக்கும் விஷயமாகும்.

ஆத்மஶுத்தி செய்வதன் நோக்கம்

என்ன காரணம் பற்றி இந்த ஶுத்திகளைச் செய்யவேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன என்பதை ஆராயும்பொழுது அதற்கான விளக்கம்போல் விளங்குகின்றன சில வாக்யங்கள். அவை

யாவந் ந தத்ஸமோஜாத: தாவந்நாராதநே க்ஷம: !
பராக்ருதம் பாவமுத்ஸ்ருஜ்ய சிவோஹமிதி பாவயேது !!

ஶிவப்ரதிஷ்டா விதி, பக்-

[1] சில இடங்களில் லிங்க அல்லது பிம்பஶுத்தி நான்காவதாகவும் மந்த்ரஶுத்தி ஐந்தாவதாகவும் காணப்படுகிறது.

அதாவது, பூஜைசெய்கின்றவனாகிய ஸாதகனுக்கு ஶிவபெருமானுக்கு ஸமமான நிலையானது எதுவரை ஏற்படவில்லையோ, அதுவரை (அவரை) பூஜிப்பதற்கான தகுதி இல்லை. எனவே ப்ராக்ருதமான=பஞ்சபூதமயமான இந்த ஶரீரபாவனையை நீக்கி ஶிவோஹம் பாவனை செய்யவேண்டும்.

மேலும்,

அதாதஸ்ஸம்ப்ரவக்ஷ்யாமி சிவீகரணமுத்தமம் !
யத்க்ருத்வாது நரஸ்ஸம்யக் சிவோ பவதி நாந்யதா !!
தேஹம் சம்சோதயேது பூர்வம் தாரணாபிஸ்து பஞ்சபி: !
சுத்ததேஹஸ்ததோ பூத்வா சிவமந்த்ராந்நியோஜயேது !!

ஶ்ரீமத் ஸர்வஜ்ஞோத்தராகம:, பக் 21, கையெழுத்துப் ப்ரதி எண் கூ.மீ760

நா ருத்ரஸ்ஸம்ஸ்மரேத் ருத்ரம் நா ருத்ரோருத்ரமர்சயெத் !
நா ருத்ரோ கீர்தயேத் ருத்ரம் நா ருத்ரோ ருத்ரமாப்நுயாத் !!

ஸகலாகமஸாரஸங்க்ரஹம், பக் -64

அதார்ச்சாபவநே சுத்தே சஸ்த்ரப்ராகார ரக்ஷிதே !
வர்மகர்பே சிவீபூய பஹிரந்தச்சிவம் யஜேத் !!

ஶ்ரீமந் ம்ருகேந்த்ராகம:, அர்சா ப்ரகரணம்:, பக்-18

என்பது போன்ற வாக்யங்களும் ஶிவபெருமானை பூஜை செய்வதற்கு பூஜகனும் ஶிவமாக மாறவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்துகின்றன.

எனவே ஆத்மஶுத்தியானது '**ஶிவோஹம் =ஶிவனே நான்**' என்ற நிலையை ஸாதகன் அடைவதற்குத் துணைபுரியும் வண்ணமாக அமைந்துள்ளது என்பது விளங்குகிறது.

ஆத்மஶுத்தி என்ற இந்த க்ரியையானது 'பூதஶுத்தி-அந்தர்யஜநம்-ஹவநம்-ஸமாதி' என்ற பகுதிகளை உள்ளடக்கியது ஆகும் என்பதை,

"தத்ர ப்ரதமம் ஆத்மசுத்யுபவர்ணந தத்பர: தஸ்யா பூதசுத்யந்தர்யஜந ஹவந ஸமாதி ஸமாஹாராத்மகத்வாத்" என்ற வாக்யம் உணர்த்துகிறது.

-க்ரியா க்ரம த்யோதிகா, ப்ரபா வ்யாக்யா, பக்- 59

மேற்கூறிய விளக்கத்தின் மூலம் 'பூதஶுத்தி என்பது ஆத்மஶுத்தியின் ஒரு அங்கமே' என்பதும் அதுவே ஒரு சில இடங்களில் 'பூதஶுத்தி' என்றும், அழைக்கப்படுகிறது என்பது விளங்குகிறது.

ஆத்மஶுத்தி-பூதஶுத்தி-ஶிவீகரணம் = பெயர் விளக்கங்கள்

ஆத்மஶுத்தி என்பது

"பூஜகஜீவஸ்ய சிவபாவாத்வ ஆபாதநாத்மிகா ஜீவசுத்தி ரூபா"

ஶிவார்ச்சநா சந்த்ரிகா, பக்-21

அதாவது பூஜகனின் ஜீவனை ஶிவமயமாக ஆக்குதல், என்கிறார் ஸ்ரீமாந் அப்பய்ய தீக்ஷிதர்.

பூதஶுத்தி என்பது

"பூஜக தேஹஸ்ய சிவபாவாத்வ ஆபாதநாத்மிகா தேஹசுத்திரூபா "

ஶிவார்ச்சநா சந்த்ரிகா, பக்-22

அதாவது ஸூக்ஷ்ம மற்றும் ஸ்தூலபூதங்களால் உண்டான ஸாதகனின் ஸூக்ஷ்ம மற்றும் ஸ்தூல ஶரீரங்களை ஶுத்திசெய்வதன் மூலமாக ஶிவஶரீரமாகச் செய்தல் என்பதும் அவரது வாக்கு.

ஶிவீகரணம் என்பதற்கு ஸ்ரீமந் நிர்மலமணி தேஶிகர், தமது உரையான ப்ரபாவில், ஆத்மாவிற்கான விஶேஷ ஶுத்தியைத் தரவல்லதான கர்மா ஆகும் என்று கூறுகிறார். மேலும் அவ்விஷயத்தை ஸ்ரீமத் ஸர்வஜ்ஞோத்தராகமத்தின் உரையாசிரியர்,

அதாதஸ்ஸம்ப்ரவக்ஷ்யாமி சிவீகரணமுத்தமம்

என்ற இடத்தில் ஶிவத்வம் என்பது ஸர்வஜ்ஞத்வம் ஸர்வகர்த்ருத்வம் ஆகியவற்றுடன் கூடியது ஆகும். நித்யமும் அவைகளோடு கூடியிருப்பதால் பரமேஶ்வரன் ஶிவன் என்று அழைக்கப்படுகிறார்.

அந்த ஶிவத்வமானது, ஆத்மாக்கள் அநாதியே அஶுத்தமாகிய-மலங்களால் மறைக்கப்பட்டிருப்பதால் அவ்வாத்மாக்களுக்கு ப்ரகாஶிப்பதில்லை. அதை நமது ஆசார்யரும்

ந ஸர்வத்ர யுகபத் சிவத்வம் விராஜதே

ஆன்மாக்களுக்கு ஶிவத்வமானது எவ்விடத்தும் ஒரே ஸமயத்தில் விளங்குவது இல்லை என்கிறார். எனவே ஶிவபெருமானே ஶுத்தர் என்று அழைக்கப்படுகிறார். மலங்களுடன் கூடியவர்கள் அஶிவர்கள் அஶுத்தர்கள். மேலும்,

யேநேதம் தத்திபோகத:

என்ற ஸ்ரீமத் கிரணாகம வசநத்தின் மூலமாக, ப்ராரப்த கர்மத்தின் போகமானது அனுபவிக்கப்பட்டே ஆகவேண்டும் என்பதும், அஸத்யோ நிர்வாண தீக்ஷையினால்

அவற்றை முழுமையாக அழிக்கமுடியாது என்பதும் விளங்குகிறது. ஆகையால், அவற்றை தீக்ஷைக்குப் பிறகு ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக ஶிவீகரணம் அர்ச்சநம் போன்றவற்றால் நீக்கவேண்டும் என்பது விளங்குகிறது.

ஸஞ்சிதம் மற்றும் ஆகாமி ஆகிய இரண்டு கர்மங்களில் இருந்து மட்டும் தூய்மையான ஆத்மாவிற்கு, ஸாமாந்ய ஶுத்தியின் பொருட்டு விதிக்கப்பட்ட ஸ்நாநம் முதலானவற்றைச் செய்த பிறகு, விஶேஷஶுத்திக்கு ஹேதுவாக விளங்குகின்றது ஶிவீகரணம் என்று கூறுகிறார்.

அசிவ: சிவ: ஸம்பத்யமாந: க்ரியதே அநேநேதி சிவீகரணசப்தார்த:

க்ரியா-க்ரம-த்யோதிகா, ப்ரபா-வ்யாக்யா, பக்-61

எந்த க்ரியையினால் ஶிவனல்லாதவன் ஶிவனாக மாறுகிறானோ அந்த க்ரியைக்குச் ஶிவீகரணம் என்று பெயர் என ஶிவீகரணம் என்பதன் பொருளை விளக்குகிறார். To transform something in to a state of Sivatvam is called sivIkaranam.

மேற்கூறியவற்றின் மூலம் ஆத்மஶுத்தி, பூதஶுத்தி, ஶிவீகரணம் என்ற சொற்களின் பொருள் நமக்கு நன்கு விளங்குகிறது.

தீக்ஷா ப்ரகரணத்தில் பூதஶுத்தியை தாரணா என்று குறிப்பிடுகிறார் ஶ்ரீமத் அகோர ஶிவாசார்யர் **'நித்யோக்தவத் தாரணாபி: விசோத்ய'** என்பது அவரது வாக்கு. அவ்விடத்தில் ஶ்ரீமந் நிர்மலமணி தேஶிகர்,

"ப்ரதிபூதம் ப்ராணாயாம அந்வித வர்ண சிஹ்நாதி பாவநாதிபி: விசோத்ய"

என்று கூறி அதற்கான [2]ப்ரமாண வாக்யத்தை ஶ்ரீமத் காமிகாகமத்திலிருந்து தருகிறார். அவ்வாக்யமானது,

வர்ண சிஹ்நாக்ருதி குணை: மந்த்ர-மந்த்ரேசபூர்வகை: !
யத்-த்யாநம் ப்ரதிபூதந்து ப்ராணாயாம ஸமந்விதம் !!
ததத்ர தாரணா ப்ரோக்தா ----------! என்பதாகும்.

தீக்ஷாவிதி, க்ரியா-க்ரம-த்யோதி. ப்ரபா, பக் - 207

[2] ஆசிரியர் இவ்விடத்தில் பூதஶுத்தியை தாரணா என்று கூறுகின்றகாரனத்தால் பூதஶுத்திக்கு தாரணா என்ற பெயர் இருப்பது விளங்குகிறது. எனவே பூதஶுத்தியைச் செய்யவேண்டும் என்பதோடு நிறுத்திக்கொள்ளலாம். ஆனால் ஶ்ரீமந் நிர்மலமணி தேசிகர் அவர்கள் தாரணா என்ற சொல்லினால் பூதஶுத்தியை ஆகமம் எங்கு குறிப்பிட்டுள்ளது என்ற வாக்யத்தை எடுத்துக் கொடுத்திருப்பது, ஆகமங்களில் அவருக்குள்ள அதிகமான பரிசயத்தையும், ஆகமங்களில் இல்லாத விஷயங்களை ஆசார்யர்கள் கூறமாட்டார்கள் என்பதை நமக்கு விளக்கவுமே தந்த்திருப்பார் போலத்தோன்றுகிறது.

ஸ்ரீ ஸ்வாமீ சிந்மயாநந்தர் அவர்கள் The purpose of life is to convert oneself from animal-man to man-man, from man-man to God-man என்று குறிப்பிடுவார்கள். அது கிட்டத்தட்ட பூதஜ்ஞத்தியின் பயனாகிய ஜிவத்வப்ராப்தியைக் குறிப்பிடுவதைப் போல விளங்குகிறது.

பூதஜ்ஞத்தி செய்யவேண்டியதன் அவஶ்யம்

பூதஜ்ஞத்தியைச் செய்வதன் மூலமாக பூஜை செய்கின்ற ஸாதகனுக்கு பூஜையைச் செய்வதற்கான தகுதியான ஜிவத்வம் என்பது ஏற்படுகிறது என்பதை இதுவரைப் பார்த்தோம். இனி, என்ன காரணத்தினால் பூஜகன் தகுதியற்றவனாக இருக்கிறான் என்பதைப் பார்ப்போம்.

ஆணவம், மாயை, கன்மம் எனும் மூவகைக் கட்டுக்களால் பந்தப்பட்டு பஜுக்களாகிய ஆன்மாக்கள் நிற்கின்றன. அவ்வான்மாக்கள் பாஶங்களில் இருந்து விடுபட்டு முக்தி அடையவேண்டும் என்பதற்காகவே பரமகருணாநிதியாகிய பரமேஶ்வரன் ஸ்ருஷ்டியில் ஈடுபடுகிறார் என்பது ப்ரஸித்தம்.

தனு, கரண, புவந, போகங்களைத் தந்து, பல பிறவிகளில் ஆன்மாக்களைப் பக்குவப்படச் செய்து, பிறகு தானே ஆசார்யவடிவம் தாங்கி எழுந்தருளி தீக்ஷையினால் ஆன்மாக்களைப் பற்றி நிற்கின்ற பாஶங்களைப் போக்குகிறார் பரமேஶ்வரன்.

வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாம் சிறுமைதப்பித்
தாழ்வெனும் தன்மையோடும் சைவமாம் சமயம் சாரும்
ஊழ்பெறல் அறிது சால உயர் சிவஞானத்தாலே
போழ் இளமதியினானைப் போற்றினால் அருள் பெற்றாரே

ஜிவாஞான ஸித்தியார், சுபக்கம், பாடல் எண்-

என்று உயிர் சைவசமயத்தில் பிறந்தபோதும் கூட ஜிவபெருமானை வழிபடவேண்டும் என்ற எண்ணம் அந்த உயிர்க்கு வருவதற்குகூட அவனருள் வேண்டும் என்பது ஸ்ரீமத் அருணந்தி ஜிவாசார்யாரின் திருவாக்கால் விளங்குகிறது.

மூவகைப் பாஶங்களுள் கர்மபாஶமானது, ஸஞ்சிதம், ப்ராரப்தம், ஆகாமி என மூவகைப்படும். ஸஞ்சிதம் பலபிறவிகளில் செய்து நாம் சேர்த்து வைத்திருக்கின்ற புண்ய-பாப ரூபமான கர்மங்களின் தொகுப்பு. ப்ராரப்தம் என்பது ஸஞ்சிதவினைத் தொகுப்பில் பலனளிப்பதற்கான முதிர்ச்சியடைந்த பலனைத் தரத்தொடங்கிவிட்ட

கர்மங்கள். ஆகாமி என்பது இருவகை. இனி வருகின்ற ஜன்மங்களில் நாம் அனுபவிக்க இருக்கின்ற கர்மங்களும் ஆகாமி. இப்பிறவியில் நாம் ப்ராரப்தவினைப் பயன்களை அனுபவிக்கும்பொழுது நாம் செய்கின்ற வினைகளும் ஆகாமியே ஆகும்.

இவற்றுள் தீக்ஷையின் மூலமாக ஸஞ்சிதமும், முதல்வகையான ஆகாமி கர்மமும் முழுதும் அழிக்கப்பட்டுவிடுகின்றன. ப்ராரப்தமும், இப்பிறவியில் நாம் செய்கின்ற ஆகாமியும் அழிக்கப்படவில்லை.

வினைப்போகமே ஒரு தேஹம் கண்டாய் வினைதான் ஒழிந்தால்
நினைப்போதளவு நில்லாது கண்டாய் சிவன்பாத நினை
நினைப்போரை மேவுநினையாரை நீங்கிந் நெறியினின்றால்
உனைப்போல் ஒருவருண்டோ மனமே எனக்கு உற்றவரே ! என்பார் பட்டினத்தடிகள்.

- பட்டினத்தார் பாடல்கள், பாடல் எண்- 48

எனவே போகத்தில் அதிகாரம் உடைய ஆன்மாக்களுக்கு ப்ராரப்தகர்மத்தின் பயனாக விளைந்த இந்த ஶரீரம் இருக்கும் அளவும் கர்மவஶத்தால் ஏற்பட்ட போகத்தை அனுபவிக்கவேண்டியது என்பது தவிர்க்கமுடியாததாக அமைந்துள்ளது. அவ்வாறு போகங்களைப் புசிக்கும்பொழுது கர்மவாஸனையினால் மீண்டும் கர்மபாஶத்தில் கட்டுப்படாமல் இருப்பதற்காக அவர்கள் பூதஶுத்தி மற்றும் ஶிவபூஜை ஆகியவற்றால் தங்களைக் காத்துக்கொள்ளவேண்டும் என்பது கருத்து.

ஶ்ரீமத் ஸித்தாந்த ப்ரகாஶிகா என்ற நூலில் அதன் ஆசிரியர் ஶ்ரீமத் ஸர்வாத்ம ஶிவாசார்யர், தீக்ஷைக்குப்பிறகு அநுஷ்டிக்கவேண்டிய தர்மங்கள் என்ற தலைப்பில் சில விஷயங்களக் கூறுகிறார்.

அதாவது, மூவகைப்பட்ட கர்மங்களும் அழிந்தபின்னும், தீக்ஷைக்குப்பிறகு மரணம் வரையில் ஶாஸ்த்ரங்களில் கூறியவண்ணம் நித்ய நைமித்திகங்களைச் செய்துவருவதால், இப்பிறவியில் ஶரீரம் ஏற்படுவதற்குக் காரணமான ஸஹகாரீ-கர்மமலஶுத்திக்காக தபஸ், யோகம் முதலியவை செய்யப்படவேண்டும்.

தீக்ஷைக்குப்பின்னர் அறிவுப்பூர்வமாக ஆசாரக்குறைவினால் நிகழ்ந்த குற்றங்கள் ப்ராயஶ்சித்தத்தின் மூலமாக நீங்கும். மந்த்ரம், த்ரவ்யம் இவற்றின் குறைவினால் ஏற்படும் தோஷமானது பவித்ராரோபணத்தினால் நீங்கும். அறியாமல் செய்த தவறுகள் அந்த்யேஷ்டியின் மூலமாக நீங்கும். என்று குறிப்பிடுகிறார்.

இவ்விஷயங்களை நிர்வாணதீக்ஷா விதியின் உரை, அந்த்யேஷ்டியின் உரை, பவித்ரோத்ஸவத்தின் உரை, சைவஸித்தாந்தப் பட விளக்கம் போன்ற நூல்களில் விரிவாகக் காணலாம்.

ப்ராரப்தம் போகதோ நச்யேத் ஸஞ்சிதம் ஹந்தி தீக்ஷயா !
ஆகாமி த்யாந பூஜாத்யை: இதி சாஸ்த்ரஸ்ய நிச்சய: !!

தீக்ஷாவிதி, க்ரியா-க்ரம-த்யோதி. ப்ரபா, பக் - 207

என்ற வாக்யத்தின் மூலமாகவும்,

ப்ராகாகாமி = ப்ராக் ச = பூர்வதநம், ஆகாமி ச = இஹ ஜந்மநி ஜந்மாந்தரே ச போஜ்யம் என்ற வாக்யத்தின் மூலமாகவும் விளங்குகிறது.

தீக்ஷாவிதி, க்ரியா-க்ரம-த்யோதி. ப்ரபா, பக் - 207

ஸித்தாந்த ஶேகரம் என்ற நூலில் பூதங்கள் யாவும் தீக்ஷையின் போதுதான் முழுவதும் ஶுத்தம் செய்யப்பட்டு விட்டனவே, பிறகு ஏன் இப்பொழுது பூதங்களின் ஶுத்தியானது செய்ப்படவேண்டும் என்ற கேள்வியைக் கேட்டு, அதற்கு பதிலும் கூறுகிறது.

க்ரமாந்நது ச பூதாநி தீக்ஷயா குருணாணுபி: !
க்ருதாநி பூர்வமேதேஷாம் சுத்யா கிம் ஸாத்யதேதுநா !!
ஸத்யம் பூதாநி சுத்தாநி த்விப்ரகாராணி தாநி து !
ஆப்யந்தராணி பாஹ்யாநி தேஹே சாப்யந்தராணி ச !!
ஷடத்வஸ்தாநி பாஹ்யாநி தாநி சுத்தாநி தீக்ஷயா !
தேஹஸ்தாநி து பூதாநி சோத்யாநி ஸ்யுர்திநே திநே !!

ஸித்தாந்த ஶேகரம், ஶிவார்ச்சநம், பக்-33

அதாவது, பூதங்கள் யாவும் தீக்ஷையின் போது ஶுத்தி செய்யப்பட்டன என்பது ஸத்யம் தான். ஆனால், பூதங்கள் உட்பூதங்கள், வெளிபூதங்கள் என இருவகைப்பட்டவை. அவற்றுள் வெளியில் உள்ளவைகளான ஷடத்வாக்களில் வருகின்ற பூதங்களே தீக்ஷையின் போது ஶுத்தம் செய்யப்பட்டன. எனவே தேஹத்தில் விளங்குகின்றதான வெளியில் உள்ள பூதங்களை ஒவ்வொரு நாளும் ஶுத்தம் செய்யவேண்டும் என்று கூறுகிறது.மேலும்,

மாதாபித்ருமலோத்பூதே தேஹே ஸ்தாதும் ந யுஜ்யதே !
தஸ்மாந் மந்த்ரமய: காய: க்ரியதே ப்ரதிவாஸரம் !!

ஸித்தாந்த ஶேகரம், ஶிவார்ச்சநம், பக்-33

தாய்தந்தையரின் அழுக்கில் இருந்து தோன்றிய இந்த தேஹத்தில் இறைவனைப் பூஜித்தல் என்பது முடியாது. எனவே ஒவ்வொருநாளும் உடலை மந்த்ரமயமாக ஆக்கிக்கொள்ளவேண்டும்.

ப்ராரப்தம் தேஹமேவோக்தம் தேஹப்ராரப்தமேவ ஹி !
தேஹப்ராரப்த ஸம்யோகாத் பூதசுத்தி: திநே திநே !!
நிச்சேஷம் தக்தபாசஸ்ய புக்தபோகஸ்யசாத்மந: !
நிர்தக்த ஸஞ்சிதாகாமி கர்மணோ நிர்மலாத்மந: !!
தாரணைச்சோதிதே தேஹே சிவஸ்ஸாக்ஷாத் ப்ரத்ருச்யதே !
ப்ருதிவ்யாப்தஸ்ததாதேஜோ வாயுராகாச ஏவ ஹி !!
ஏதாநி பஞ்சபூதாநி ஸர்வேஷாம் வ்யாபகாநி வை !
ந விநா பஞ்சபிஸ்தத்வை: தேஹபந்தோ விதீயதே !!
ஸ்தூலஸூக்ஷ்ம விபாகேண க்ஞாத்வைதாநி து சோதயேத் !
ரவிகாந்தகதோ வஹ்நி: யதா தஹதி பாவக: !
பூதசுத்திர்பவேதேவம் சரீரேஷு சரீரிணாம் !!
தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந பூஜாதௌ பஞ்சசுத்திகம் !!

ப்ராரப்தம் என்பது தேஹமே என்பதாலும், தேஹம் என்பது ப்ராரப்தத்தின் விளைவே என்பதாலும், அவை இரண்டின் சேர்க்கையின் காரணமாக பூதஶுத்தியானது ஒவ்வொருநாளும் செய்யப்படவேண்டும்.

ஆதவனின் கிரணங்கள் எங்கும் விரவி இருப்பினும், ஸூர்யகாந்தக் கண்ணாடியின் வழியாக வரும்பொழுது எவ்வாறு பஞ்சை எரிக்கின்ற ஆற்றலைப் பெறுகின்றதோ, அதுபோல, எங்கும் நிறைந்திருக்கும் ஶிவத்வமானது பூதஶுத்தி செய்யப்பட்ட உடலில் விளங்குகிறது.

ஶ்ரீமத் ஈஶாநகுருதேவ பத்ததி என்ற நூலில், மலிஷ்டமான=அஶுத்தமான இந்த ஶரீரத்திற்கு தீர்த்தங்களால் செய்யப்படுகின்ற க்ஷாளநம்=ஸ்நாநம் போன்ற ஶுத்தியானது, பூரணமாக ஆகாது, எனவே தான் பெரியோர்களால் ஆத்மஶுத்தியானது இரண்டுவிதமாக (ஸூக்ஷ்ம-ஸ்தூலஶரீர ஶுத்தி) முறையாகச் சொல்லப்பட்டுள்ளது என்று குறிப்பிடுகிறார்.

ந ஹி ஸலில விசேஷை: கேவலம் க்ஷாளநாத்யை:
ப்ரபவதி பரிசுத்தம் யந்மலிஷ்டம் சரீரம் !
த்விவிதமிதிஹ ஸத்பி: ஸாந்தரங்காத்மசுத்தி:
ஸவிதிகமுபதிஷ்டாம் தாந் பஜே நித்யசோபி !!

ஶ்ரீமத் ஈஶாநஶிவகுருதேவ பத்ததி, பாகம் 1, பக் 101

Worshiping Siva in Medieval India, Ritual in an Oscillating Universe, என்ற நூலில் அதன் ஆசிரியர் Richard H.Davis, ஆத்மார்த்த பூஜையை முழுவதும் மிகவும் அழகாக விளக்கியுள்ளார்கள். அந்நூலில் பூதஶுத்தியைப் பற்றி அவர் கூறுகின்றதைப் பார்ப்போம்.

"Only a Siva can worship Siva," say the texts. Yet in his normal condition the worshiper is unlike Siva in two fundamental respects: he is immersed in impurities, and he lacks Siva's powers. Before he may worship Siva, he must deal with both these deficiencies. First, with a set of purificatory actions he empties his body of its impure material constituents; then he superimposes mantras invoking Siva's powers onto all parts of his body. In this way his body is made over into an unfettered "divine body," a pure body composed of mantra powers. As Siva acts through mantras that constitute his body, so the worshiper is now able to act in ritual with his body reconstituted as a mantra-body.

The relevance of emission and reabsorption to this rite may be stated very briefly. Upward movements on or within the body follow the path of reabsorption, while descending movements follow the path of emission. Ritual actions aimed at removing things from the body follow an ascending course, and actions that impose or add things onto the body move downward. The movement that the ritualist follows in transforming his body is therefore cyclic: first ascending as he reabsorbs all bodily impurities, then descending as he imposes mantras on it. In the process, he fundamentally alters the constituents of his body, replacing impurities with the powers of mantras.

Worshiping Siva in Medieval India, Ritual in an Oscillating Universe,Richard H.Davis, Chapter Two, Page 52.

மேற்கூறிய விளக்கங்களின் மூலம் தீக்ஷையினால் ப்ராரப்தகர்மாவானது அழிக்கப்படாததாலும், தேஹமானது அஶுத்தமாயா கார்யமானதாலும், மேலும்

தாய்தந்தையரின் ஶுக்லஶ்ரோணிதரூபமாகிய அழுக்குகளில் இருந்து தோன்றியதாலும் அவற்றை ஶுத்தம் செய்வது மிகவும் அவஶ்யமாகிறது என்பது விளங்குகிறது.

இன்று ப்ரஸித்தமாக அநுஷ்டாநத்தில் இருக்கின்ற ஸ்ரீமத் அகோர ஶிவாசார்ய பத்ததியைத் தழுவியே இக்கட்டுரை பெரும்பாலும் அமைந்துள்ளது. ஆனால் இந்த பூதஶுத்தியே பலபக்ஷங்களாக, ஶிவார்ச்சநா சந்த்ரிகா, ஸித்தாந்த ஶேகரம், ஸ்ரீமத் ஈஶாநஶிவகுருதேவ பத்ததி, ஸித்தாந்த ஸாராவளீ, ஶிவபூஜாஸ்தவம், க்ரியா தீபிகா, ஶைவஸந்யாஸ பத்ததி, க்ரியாஸார: போன்ற நூல்களில் காணப்படுகிறது.

[3]பூதஶுத்தியின் பயன்

ஸமய தீக்ஷை செய்துகொண்டவர்களுக்கு தீக்ஷையின் மூலம் அவர்கள் பெற்றுக்கொண்ட மந்த்ரத்தை ஜபம் செய்து ஸித்தி செய்துகொள்ள விடாமல் அவர்களுடைய இந்த்ரிய ஶக்திகள் தடுக்கின்றன. அவர்கள் பூதஶுத்தியைச் செய்வதால் இடையூறு செய்யும் ஶக்திகள் செயலிழந்து போகின்றன.

விஶேஷதீக்ஷை ஆனவர்கள் ஶிவபூஜை, ஹோமம் போன்றவற்றைச் செய்யும்போது மேற்கூறிய இடையூறுகள் ஏற்படாமல் இருக்க பூதஶுத்தியைச் செய்யவேண்டும்.

வினைகளைக் களைவதன் மூலம் பாஶம் எனும் ஶிகையை நீங்க வைத்து ஶிவத்துடன் சேர வழி செய்யும் நிர்வாணதீக்ஷை செய்துகொண்டவர்கள் கூட நித்யமும் பூதஶுத்தியைச் செய்துதான் ஆகவேண்டும். ஏனெனில் தீக்ஷையில் அவர்களது ஸஞ்சித வினை, ஆகாமி வினை ஆகிய இரண்டு மட்டுமே நீக்கப்பட்டன. ப்ராரப்த வினையைத் தினமும் அனுபவித்தே தீரவேண்டும். அதை அனுபவிக்கும் பொழுது உண்டாகும் வாஸனை, அதனைத் தொடரும் மல-மாயாம்ஶங்கள் ஆகியவற்றைச் சிறிது சிறிதாக அழிக்க அவர்களும் அவஶ்யம் பூதஶுத்தியைச் செய்யவேண்டும்.

இதனால் ஆசார்யன், ஸாதகன், புத்ரகன், ஸமயி ஆகிய நால்வருமே பூதஶுத்தியைச் செய்வதற்கு அதிகாரிகள் என்பது விளங்குகிறது.

பூதஶுத்தி செய்வதற்கான இடம்

ஆசார்யன் அஸ்த்ரமந்த்ரத்தினால் ரக்ஷிக்கப்பட்ட யாகக்ருஹத்தில் ஶிவபெருமானுக்கு வலதுபக்கத்தில், தர்பாஸநம் போன்ற ஏதாவது ஒரு உசிதமான

[3] இப்பகுதி முழுவதும் ப்ரஹ்மஶ்ரீ ஸே. அருணஸுந்தர ஶிவாசார்யர் அவர்களது பூதஶுத்தி என்ற கட்டுரையில் அமைந்துள்ளது ஆகும்.

ஆஸநத்தில் வடக்கு முகமாக ஸுகமாக அமர்ந்துகொண்டு ஶிவீகரணத்தைச் செய்யவேண்டும்.

பூதஶுத்தியின் அங்கங்கள்

ஶிவீகரணம் என்ற ஆத்மஶுத்தியானது பூதஶுத்தி, அந்தர்யஜநம், ஹவநம், ஸமாதி என்ற பிரிவுகளை உடையது என்பதை முன்னரே பார்த்தோம். ஆனால் அதுவே மேலும் பல்வேறு உட்க்ரியைகளைத் தன்னுள் கொண்டதாக விளங்குகிறது. அவையாவன,

1. கரந்யாஸ:
2. ஸுஷும்நா த்யாநம்
3. ஜீவரக்ஷா
4. ஸூக்ஷ்மதேஹ ஶுத்தி
5. ஸ்தூலதேஹ ஶுத்தி
6. தஹநாப்லாவநம்
7. அம்ருதாப்லாவநம்
8. ஜீவஸ்தாபநம்
9. அங்கந்யாஸ:
10. ஹ்ருதயத்தில் பூஜை
11. நாபியில் ஹோமம்
12. பிந்துஸ்தாநத்தில் ஸமாதி

கரந்யாஸ:

இங்கு முதலில் கரந்யாஸம் அங்கந்யாஸம் இரண்டும் செய்து விட்டால் பிறகு, ஹ்ருதயம் முதலான இடங்களில் வைக்கப்படுகின்ற மந்த்ரங்கள் யாவும் தஹநாப்லாவனம் என்ற க்ரியையைச் செய்யும்பொழுது எரிந்துவிட நேரிடும். அதனால் முதலில் கரந்யாஸம் மட்டும் செய்ய வேண்டும்.

ஸுஷும்நா த்யாநம்

பிறகு ஸுஷும்நா எனப்படும் சுழுமுனை நாடி வழியாக ஆத்மாவானது போக்கு வரவுபுரிய இருப்பதால் முதலில் அதன் த்யானம் கூறப்படுகிறது.

சுழுமுனை நாடியானது இரண்டு கால்களின் கட்டை விரல்களில் தொடங்கி அடிவயிறு வரை இரண்டாகவும், அடிவயிறு முதல் ப்ரஹ்மரந்த்ரம் வரை ஒரே வடிவமாகவும் ஹ்ருதயம், கண்டம், தாலு, ப்ரூமத்யம், ப்ரஹ்மரந்த்ரம் ஆகிய ஐந்து

இடங்களிலும் இடாபிங்களா என்னும் இரண்டு நாடிகளோடு இணைந்த வண்ணம் மேற்கூறிய ஐந்து இடங்களிலும் கீழ்நோக்கிய ஐந்து தாமரைமொட்டுக்களை உடையதாகவும் துளை உடையதாகவும் விளங்குகிறது.

ஜீவரக்ஷா

அந்நாடியின் உள்ளும் புறமும் அம்ருதத்தை பொழிந்து கொண்டிருக்கின்ற பரம ஆகாஶவடிவினளாகிய அம்பிகையை த்யானித்து அதன் மத்தியில் (சுழுமுனையின் மத்தியில்) ஹஂஸம் என்ற பீஜமானது ஒளிப் பிழம்பாக விளங்குவதாக த்யானிக்க வேண்டும்.

பிறகு பூரகமும் கும்பகமும் செய்து மனதை முன் சொன்ன ஹஂஸம் காரத்தில் நிறுத்தி கும்பகம் செய்து, வாயுவை த்வாதஶாந்ததில் விடும்முறையாக, ஹஂஸம் பட் என்ற மந்த்ரத்தை ஐந்து முறை உச்சரிப்பதன் மூலமாக ஹ்ருதயம் முதலான இடங்களில் உள்ள அதோமுகமான தாமரைமொட்டுக்கள் மேல்நோக்கியவைகளாகவும் மலர்ந்தவைகளாகவும் செய்து வலது நாடிவழியாக ரேசகம் செய்யவேண்டும்.

பிறகு மறுபடியும் பூரகத்தினால் உடல் முழுவதும் விரவி இருக்கின்ற சைதன்யமானது =உயிரானது ஹ்ருதயத்தை இருப்பிடமாகக் கொண்டதாகவும் நன்கு ப்ரகாஶிக்கின்ற நக்ஷத்ரம் போன்றதாகவும் ஹம் என்ற மந்த்ரவடிவினதாகவும் ஜீவனை ஹ்ருதய மந்த்ரத்தால் ஸ்ம்புடம் செய்து ஹஂஸம் என்ற மந்த்ரத்தின் மீது வைக்க வேண்டும்.

பிறகு ஹஂஸம் காரத்தின் மேல் விளங்குகின்ற ஹம் என்ற அந்த மந்த்ர வடிவில் விளங்குகின்ற அந்த ஜீவனானது புர்யஷ்டகம் என்ற (ப்ருத்வீ முதல் கலாதத்வம் வரை உள்ளதான முப்பது தத்வங்களால் ஆன) ஸூக்ஷ்ம ஶரீரம் என்ற உபாதியை உடையதான ஆத்மாவினை, பரம-காரன-பிந்து வடிவினதாகவும் ஸூக்ஷ்மஶரீரத்தினை விட்டதாகவும், தோஷங்களற்றதாகவும் த்யானிக்க வேண்டும்.

பிறகு கும்பக யோகத்தினால் வாயுவை த்வாதஶாந்தத்திற்கு கொண்டு செல்லும் வண்ணமாக ஹ்ருதயம் முதலான ஸ்தானங்களில் உள்ளவர்களான ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரம், மஹேஶ்வரன், ஸதாஶிவன் ஆகிய காரணேஶ்வரர்களை விட்டு, உத்காதம் என்ற வாயுவை த்வாதஶாந்தம் வரை செலுத்துவதன் மூலம் ஓம் ஹஂஸம் ஹாம் ஹம் ஹாம் என்று ப்ராரப்த கர்மங்களை அனுபவிப்பதன் பொருட்டு த்வாதஶாந்த்தில் இருக்கின்ற பரமஶிவனிடத்தில் சேர்க்கவேண்டும்.

இவ்வாறாக மந்த்ரவடிவாக பரஶிவனிடத்தில் சேந்தவனாக ஸூக்ஷ்ம தேஹத்தை ஶுத்தி செய்வதன் பொருட்டு ப்ருத்வீ முதலான (முப்பத்தாறு) தத்வங்களை ஸம்ஹார க்ரமமாக அதனதன் காரணங்களில் ஒடுக்கி அவற்றை பரம காரண ரூபமான பிந்துவில் ஒடுக்க வேண்டும்.

ஸூக்ஷ்மதேஹ ஶுத்தி

ஜீவன் மூன்று ஶரீரங்களை உடையது. அவையாவன பரஶரீரம், லிங்கஶரீரம்=ஸூக்ஷ்ம ஶரீரம், ஸ்தூல ஶரீரம் என்பன ஆகும்.

இவற்றுள் ஸூக்ஷ்மஶரீரம் என்பது புர்யஷ்டகம் என்றும் கூறப்படும். அதற்கு ப்ருத்வீ தத்வம் முதல் கலாதத்வம் வரையிலான முப்பது தத்வங்களால் ஆன நுண்ணுடல் ஸூக்ஷ்மஶரீரம் எனப்படும் என்று விளக்குகிறார் ஶ்ரீமந் நிர்மலமணி தேஶிகர்.

தத்வங்களால் ஆன நுண்ணுடலை ஶுத்தம் செய்வது எப்படி? எனில், காரணே ஹி கார்ய லய: ந து அந்யத்ர அதாவது காரணத்தில் தான் கார்யம் ஒடுங்கும் என்ற நியதியின் படி கார்யமாகிய தத்வத்தை அதற்குக் காரணமான தத்வத்தில் ஒடுங்குவதாக பாவித்தலே அதை ஶுத்தம் செய்வதற்கான வழி என்று கூறுகின்றன ஆகமங்கள்.

எனவே நமக்கு முதலில் உத்பத்தி க்ரமமானது விளங்க வேண்டும். விளங்கினால் தான் லயம் செய்வதற்கு உதவியாக இருக்கும். எனவே தத்வங்கள் யாவை என்பதையும் அவற்றின் உத்பத்தி க்ரமத்தையும் பார்ப்போம்.

ஶுத்த தத்வங்கள் 5

1. ஶிவதத்வம்
2. ஶக்தி தத்வம்
3. ஸதாஶிவ தத்வம்
4. ஈஶ்வர தத்வம்
5. ஶுத்த வித்யா தத்வம்

அஶுத்த தத்வங்கள்

6. மாயா தத்வம்(கால-புருஷ, கலா, நியதி)
7. கலா தத்வம்
8. வித்யா தத்வம்
9. ராக தத்வம்

10. கால தத்வம்(ப்ரக்ருதி, ராக, வித்யா)

11. நியதி தத்வம்

12. புருஷ தத்வம்

13. ப்ரக்ருதி தத்வம்

14. குண தத்வம்

15. புத்தி தத்வம்

16. அஹங்கார தத்வம்

ராஜஸாஹங்காரம்	**ஸாத்விகாஹங்காரம்**	**தாமஸாஹங்காரம்**
கர்மேந்த்ரியங்கள் -5	ஞாநேந்த்ரியங்கள்+மநஸ்=6	தந்மாத்ரைகள் -ஸ்தூல பூதங்கள் 10
வாக்	மநஸ்	ஶப்தம்- ஆகாஶம்
பாணி	ஶ்ரோத்ரம்	ஸ்பர்ஶம் - வாயு
பாதம்	த்வக்	ரூபம் - அக்னி
பாயு	சக்ஷு:	ரஸம் - ஜலம்
உபஸ்தம்	ஜிஹ்வா	கந்தம் - ப்ருத்வீ
	ஆக்ராணம்	

ஆக மொத்தம் 36 தத்வங்கள் ஆகும்.

மேற்கூறிய தத்வங்கள் 36யும் ப்ராதிலோம்யேந = தலைகீழாக ஒடுக்குதலே ஸூக்ஷ்மதேஹ ஶுத்தி என்பதைப் பார்த்தோம். அது எங்ஙனம் என்பதை இனி காண்போம்.

ப்ருத்வீ முதலான பஞ்சபூதங்களை கந்தம் முதலான தந்மாத்ரைகளை அஹங்கார தத்வத்தின் மூன்றாவது பாகமாகிய தாமஸாஹங்காரத்திலும் வாக் முதலான கர்மேந்த்ரியங்களை ராஜஸாஹங்காரத்திலும் ஶ்ரோத்ரம் முதலான ஞானேந்த்ரியங்களையும் மனதையும் ஸாத்விகாஹங்காரத்திலும் அஹங்காரதத்வத்தை புத்தி தத்வத்திலும் புத்தி தத்வமானது குண தத்வத்திலும் குண தத்வமானது ப்ரக்ருதியிலும் ப்ரக்ருதி, ராக, வித்யா தத்வங்கள் கலா தத்வத்திலும் கலா, புருஷ, கால, நியதி தத்வங்கள் மாயா தத்வத்திலும் ஒடுங்கியதாக த்யானிக்க வேண்டும்.

பிறகு ஸூக்ஷ்ம தேஹத்திலுள்ள தத்வங்களை தொழிற்படுத்துவதான ஶுத்த தத்வங்களை ஒடுக்குதல் வேண்டும்.

அதன் க்ரமமானது:- ஶுத்தவித்யா தத்வத்தை ஈஶ்வர தத்வத்திலும் ஈஶ்வர தத்வத்தை ஸதாஶிவ தத்வத்திலும் அதை ஶக்தி தத்வத்திலும் அதை ஶிவ தத்வத்திலும் அதை அக்ஷுப்த ரூபமாக விளங்குகின்ற பிந்துவிலும் ஒடுக்க வேண்டும்.

ஸ்தூலதேஹ ஶுத்தி

பிறகு ஸ்தூல தேஹ ஶுத்தியானது செய்யப்பட வேண்டும். இங்கு ஸ்தூல ஸூக்ஷ்ம தேஹங்களின் தத்வஶுத்தியானது மலங்களின் கட்டில் இருந்து விடுபடுதலே தவிர நிஜமாகவே அழித்தல் என்பது பொருளல்ல. உதாரணமாக விஷக்கடி ஏறிய மனிதனுடைய உடலில் உள்ள விஷத்தை நீக்குவதற்கு மாந்த்ரிகன் கருடபாவனை செய்து நீக்குவதுபோலவே ஆகும். எனவே அவற்றுள் ஆத்மபாவனை கூடாது.

ஸ்தூலதேஹத்தின் இலக்கணமானது

ஸ்தூலதேஹஸ்தாவத் ஜாதிகுலாத்யபிமாநாஸ்பதம் ப்ருதிவ்யப்-தேஜோ-வாய்வாகாசாநாம் ஸமவாய: ஸாதாரணா ஸாதாரணரூபம் புவநஜம் பூதசரீரமித்யுச்யதே !
என்று கூறப்படுகிறது. அதாவது

இந்த்ரியங்களுக்குப் புலப்படுகின்ற வஸ்துக்களுக்கு ஸ்தூலவஸ்துக்கள் என்று பெயர். அவ்வகையில் ஸ்தூலபூதங்களான ப்ருத்வீ முதலானவற்றால் ஆனதும், கண் முதலான இந்த்ரியங்களால் அறியப்படுகின்றதுமான உடலுக்கு ஸ்தூலஶரீரம் என்று பெயர்.

ஸ்தூலஶரீரத்தைத் தூய்மை செய்யும் முறையையும் ஶைவாகமங்கள் மிக அழகாக விளக்குகின்றன. அதாவது பஞ்சபூதங்களுள் ஒரு சில பூதங்கள் மித்ர பாவமும், சில ஶத்ரு பாவமும், சில ஸமத்வமும் உடையவை. நீரும் நெருப்பும், ப்ருத்வியும் வாயுவும் எதிரிடையானவை. ப்ருத்வியும் ஜலமும், காற்றும் நெருப்பும் மித்ரத்வபாவம் உடையவை. நீரும் வாயுவும், பூமியும் அக்னியும் மத்யபாவம் உடையவை. ஆகாஶம் பிற நான்குடனுமே மித்ரத்வம் உடையது.

எனவே அந்தந்த பூதங்களுக்குரிய வர்ணம், ஸ்வபாவம், சிஹ்நம், பீஜம், தேவதா, மந்த்ரம், கலா ஆகிய அடையாளங்களோடு அவற்றைத் த்யானித்து வாயுவை மேல்நோக்கிச் செலுத்துகின்ற உத்காதம் என்ற யோகஸாதனையின் மூலமாக பூதங்களின் குணங்களை நீக்கி அவைகளின் எதிரிபூதத்தால் ஆக்ரமிக்கப்பட்டுச் செயலிழந்தவைகளாகச் செய்தல் வேண்டும்.

பூதங்களின் ஸ்வரூபத்தை விளக்கும் அட்டவணை

	நிலம்	நீர்	நெருப்பு	காற்று	ஆகாயம்
நிறம்	மஞ்சள்	வெண்மை	சிகப்பு	கருப்பு	புகைவண்ணம்
தன்மை	கடினம்	மென்மை	மேல்நோக்கு	உருவமின்மை	ஶப்தின்யம்
அடையாளம்	வஜ்ரம்	தாமரை	ஸ்வஸ்திகம்	ஆறுபுள்ளிகள்	அடையாளம் அற்றது
பீஜம்	லம்	வம்	ரம்	யம்	ஹம்
தேவதை	ப்ரஹ்மா	விஷ்ணு	ருத்ரன்	ஈஶ்வரன்	ஸதாஶிவன்
மந்த்ரம்	ஸத்யோஜாதம் ஹ்ருதயம்	வாமதேவம் ஶிரஸ்	அகோரம் ஶிகை	தத்புருஷம் கவசம்	ஈஶானம் நேத்ரம்,அஸ்த்ரம்
கலை	நிவ்ருத்தி	ப்ரதிஷ்டா	வித்யா	ஶாந்தி	ஶாந்த்யதீதா
குணங்களின் எண்ணிக்கை	5	4	3	2	1
உத்காத மந்த்ரம்	ஹ்லாம்	ஹ்வீம்	ஹ்ரும்	ஹ்யைம்	ஹௌம்
மண்டல வடிவம்	சதுரம்	அர்த்தசந்த்ரம்	முக்கோணம்	ஷட்கோணம்	வட்டம்

மேற்காணும் வண்ணம் ஐந்துபூதங்களையும் த்யானித்து ப்ருத்வீ வாயுவினால் ஆக்ரமிக்கப்பட்டதாகவும், ஜலம் அக்னியினால் ஆக்ரமிக்கப்பட்டதாகவும், அக்னி ஜலத்தினால் ஆக்ரமிக்கப்பட்டதாகவும், வாயு ப்ருத்வியினால் ஆக்ரமிக்கப்பட்டதாகவும், ஆகாஶத்திற்கு எதிரி இல்லாததால் பௌதிகாகாஶமானது பரமாகாஶத்தினால் வ்யாபிக்கப்பட்டதாகவும் அதனால் அநித்யத்வம், அவ்யாபகத்வம், அஶுத்தத்வம் முதலான தன்னுடைய ஸ்வரூபம் நீங்கி நித்யத்வம், வ்யாபகத்வம், ஶுத்தத்வம் உடையதாகவும் பாவிக்கவேண்டும்.

ஒவ்வொரு பூதங்களும் 5-4-3-2-1 என்ற குணங்களைக் கொண்டு விளங்குகின்றன. எனவே பூரக-கும்பக-ரேசகாத்மகமான அதே எண்ணிக்கை கொண்ட ப்ராணாயாமத்தினால் உத்காதத்தின் மூலமாக அந்த குணங்கள் அவற்றை விட்டு நீங்கியதாக பாவிக்கவேண்டும். அதாவது ப்ருத்வீக்கு ஐந்து உத்காதம். ஜலத்திற்கு 4. அக்னிக்கு 3. வாயுவிற்கு 2. ஆகாஶத்திற்கு 1.

தஹநாப்லாவனம்-அம்ருதாப்லாவனம்

குணங்களும் நீங்கி, எதிரியினால் ஆக்ரமிக்கப்பட்டு செயலிழந்து விளங்குகின்ற அந்த ஶரீரத்தில் உள்ள ப்ராரப்ததோஷங்கள் யாவையும் கால் கட்டைவிரலில் இருந்து தோன்றிய அக்னியின் மூலமாக எரித்தல் வேண்டும்.

பிறகு, பந்தகரூபமாக விளங்குகின்ற ஸ்தூல-ஸூக்ஷ்மஶரீரங்களை த்வாதஶாந்தத்தில் விளங்குகின்ற பிந்துவில் இருந்து வழிகின்ற அம்ருதத்தினால், ஶரீரத்தின் 7200 நாடிகளும் உள்ளும் புறமும் நனைந்ததாக பாவித்தல் அம்ருதாப்லாவநம் ஆகும்.

ஜீவந்யாஸ:

பிறகு, ஹ்ருதயத்தில் நாளம், பத்ரம், கர்ணிகை இவைகளோடு கூடிய பத்மாஸநம் கற்பித்து, அதில் அகார-உகார-மகாராத்மகமான ப்ரணவமய ஆஸநத்தை ஶுத்தவித்யாதத்வாந்தம் வ்யாபித்ததாக பாவித்து அமைக்கவேண்டும். அதன் கர்ணிகையில் மந்த்ரபுர்யஷ்டகத்தை சதுஷ்கலா ப்ராஸாதமந்த்ரத்தினால் உண்டாக்கி, அதில் முன்பு ரக்ஷணத்திற்காக த்வாதஶாந்தத்தில் கொண்டுவைத்த ஹம் பீஜ வடிவான ஜீவனை ஶிவமயமானதாக பாவித்து, ப்ரணவத்தோடு கூடிய பஞ்சகலாப்ராஸாத மந்த்ரத்தினால், பூரகயோகத்தினால் ஸ்ருஷ்டி-க்ரமமாகக் கொணர்ந்து ஜோதிவடிவாக ஸ்தாபிக்கவேண்டும். வெளஷடந்த ஶக்தி மந்த்ரத்தை உச்சரித்து ஆத்மாவானது ஶரீரத்தை விட்டு வெளியேறி மீண்டும் ஶரீரத்தின் உட்புகுந்த காரணத்தால், ஶிவமயமான அந்த ஜீவனுக்கு அம்ருத அபிஷேகம் செய்யவேண்டும்.

மந்த்ரந்யாஸங்கள்

பிறகு மந்த்ரங்களை ந்யாஸம் செய்யவேண்டும். பௌதிகமான ஸ்தூலஸூக்ஷ்ம ஶரீரங்கள் நீங்கிய ஜீவனானது மந்த்ரமயமான தேஹத்தை உண்டாக்குதல்.

அந்தர்யஜநம்-ஹவநம்-ஸமாதி

ஜ்யோதிர்லிங்கம் ஹ்ருதிஸ்தம் யத்ததேநவாப்யர்ச்யதே பஹி: !
யதஸ்தஸ்மாத் புரா குர்யாதந்தர்யாகமிஹோச்யதே !!

என்ற வசநப்படி ஹ்ருதயத்தில் வீற்றிருக்கின்ற ஶிவபெருமானையே நாம் வெளியில் பூஜிக்கின்றோம். எனவே உள்ளிருக்கும் ஶிவபெருமானை முதலில் பூஜிக்கவேண்டும்.

எனவே ஹ்ருதயத்தில் பூஜையும், நாபியில் ஹோமமும், லலாட மத்தியில் ஸமாதியும் செய்யவேண்டும்.

இவ்வாறாக பூதஶுத்தி-அந்தர்யஜந-ஹவந-ஸமாதிகளால் ஆத்மஶுத்தியானது ஏற்படுகிறது.

துணைநூல்கள்

1. ஸ்ரீமத் காமிகாகமம், ஸ்வாமிநாத ஸிவாசார்யர் , வெளியீடு: தென்னிந்திய அர்ச்சகர் ஸங்கம், சென்னை 1975,
2. ஸ்ரீமத் காரணாகமம், வெளியீடு, மயிலை அழகப்ப முதலியார்,
3. ஸ்ரீமத் அஜிதாகமம், என். ஆர். பட், வெளியீடு: பாண்டிச்சேரி ப்ரஞ்ச் நிறுவனம், 1964,
4. ஸ்ரீமத் ஸுப்ரபேதாகமம், மயிலை அழகப்ப முதலியார்,
5. ஸ்ரீமத் ஸர்வஜ்ஞோத்தராகமம், கையெழுத்து ப்ரதி, பிரெஞ்சு நிறுவனம், எண்
6. ஸ்ரீமத் அகோர ஸிவாசார்ய பத்ததி- ப்ரபா வ்யாக்யாநம், நிர்மலமணி தேஸிகர், பிள்ளையார்பட்டி ஸிவஸ்ரீ கி. பிச்சை ஸிவாசார்யர் மணிவிழா மலர், 2008
7. ஸ்ரீமத் ஸோமஸம்பு பத்ததி, வெளியீடு, ஸிவாகம ஸித்தாந்த பரிபாலந ஸங்கம், தேவகோட்டை
8. ஸ்ரீமத் ஈஸாநஸிவ குருதேவ பத்ததி, டி. கணபதி ஸாஸ்த்ரி, வெளியீடு:பாரதீய வித்யா ப்ரகாஸந், வாரணாஸி, 1988.
9. ஸ்ரீமத் ஸித்தாந்த ஸாராவளீ, அநந்தஸம்பு உரையுடன், வெளியீடு, சென்னை பல்கலைக் கழகம்.
10. ஸிவபூஜா ஸ்தவ வ்யாக்யா, வெளியீடு, ஸிவாகம ஸித்தாந்த பரிபாலந ஸங்கம், தேவகோட்டை
11. ஸிவார்சநா சந்த்ரிகா, ஸ்ரீமத் அப்பய தீக்ஷிதர், வெளியீடு: ஸிவாகம ஸித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை,1922.
12. க்ரியா ஸார:, நீலகண்ட ஸிவாசார்யர், வெளியீடு: மைசூர் பல்கலைகழகம், 1957,
13. க்ரியா தீபிகா, ஸிவாக்ரயோகீந்த்ர ஸிவாசார்யர்,
14. ஸித்தாந்த ஸேகரம், ஸ்ரீமத் விஸ்வநாதர், வெளியீடு: ஸிவஸ்ரீ தலக்காடு ஆகமிக க்ருஷ்ண தீக்ஷிதர், 1971.
15. அந்த்யேஷ்டி விதி, ஸ்ரீமத் அகோர ஸிவாசார்யர், விளக்கம், ப்ரஹ்மஸ்ரீ ஸே. அருணஸுந்தர ஸிவாசார்யர், வெளியீடு: ஸ்ரீ ஸிவாம்ருத சங்கம், திருப்பத்தூர், 2010.
16. ஸகலாகம ஸார ஸங்க்ரஹம், அழகப்ப முதலியார், திருவிடைமருதூர் ஸிவஸ்ரீ சா.கண்ணப்ப குருக்கள் மணிவிழா மலர்
17. ஸைவாகமஸாரத் தேன்துளித் திரட்டு, தமிழ்நாடு அர்ச்சகர் சங்கம், திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், 2004.
18. ஸைவாகம லேக ஸர்வஸ்வம், ப்ரஹ்மஸ்ரீ ஸே. அருணஸுந்தர குருக்கள், இந்திய ஆய்வியல் நிறுவனம், சென்னை.
19. ஆத்மார்த்த ஸிவபூஜை விளக்கம், ஏ.வி. ஸ்வாமிநாத ஸிவாசார்யர், மயிலாடுதுறை
20. ஸிவபூஜை விளக்கம், அச்சுவேலி குமாரசுவாமி குருக்கள், வெளியீடு, காந்தளகம் சென்னை
21. ஸிவபூஜை அகவல், கமலை ஞானப்ரகாஸர், தருமை ஆதீநம்
22. தாயுமானவரின் பராபரக்கண்ணி, தாயுமானவர் பாடல்கள், த்ருமை ஆதீநம்
23. Pandit N.R Bhatt Felicitation Volume, Editors - P.S. Filliozat, S.P. Narang, C.P. Bhatta, Published by Motilal Banarsidass Publishers Private Limited
24. Worshiping Siva in Medieval India,